**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C.49/2024**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW- 10/Lw-13 |
| Name | : | Mr. Balamurugan |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 9.9.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் வீரபாண்டி காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 2.12.2023 ஆம் தேதி நல்லூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்த போது இந்த வழக்கில் இதற்கு முன்பு பணியில் இருந்த ஆய்வாளர் புலன்விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கோப்பு பின்பு என்னிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நாம் எதிரியை தேடி 2.12.23 ஆம் தேதி காலை 6 மணிக்கு நல்லூர்

எச்பி பெட்ரோல் பங்க் அருகில் சிவா கிரேன் என்னும் அலுவலகத்திற்கு அருகில் சந்தேகத்திற்கு இடமாக இருந்த நபர் எங்களை பார்த்தவுடன் தப்பி ஓட முயற்சித்த வரை பிடித்து விசாரணை செய்தபோது முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்தார். விசாரணையின் மூலம் அவருடைய பெயர் சதீஷ்குமார் என்று தெரியவந்தது. விசாரணையின் போது அவர் 28.11.2023 ஆம் தேதி இரவு சுமார் 22:45 மணிக்கு திருப்பூர் முத்தனம்பாளையத்திலிருந்து கோவில்வழி செல்லும் ரோட்டில் உள்ள சரணம் ஐயப்பா நகர், ஒரு பெண்ணையும் ஆணையும் இரும்புராடால் தாக்கி விட்டு அந்த பெண்ணிடம் இருந்த ஹேண்ட் பேக்கை கொள்ளை அடித்து விட்டு தப்பி சென்றதாக கூறினார். அதன் பிறகு விசாரணையின் போது அந்த நபர் தன்னிச்சையாக எந்த ஒரு வற்புறுதல் இல்லாமல் தன்னிச்சையாக கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை அப்போது அங்கு இருந்த சாட்சிகள் செந்தில்குமார், கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன்.

2, தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தான் நான் பதிவு செய்தது முதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய இருசக்கர வாகனமான TN39BS0856 Bajaj CT100 வாகனத்தை முன்னிலைப்படுத்தினார். அந்த வாகனத்தை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அவ்வாறு கைப்பற்றிய பிறகு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர் தான் அது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதன் பிறகு அன்றைய தினம் காலை 9:40 மணிக்கு எதிரி எங்களை அழைத்துக்கொண்டு புதுப்பாளையம், முயல் பண்ணை அருகில் உள்ள முட்புதருக்கு அழைத்துச் சென்றார். அந்தப் புதரில் இருந்து ஐஓபி வங்கியின் இரண்டு காசோலை புத்தகங்களை எதிரி எடுத்துக் கொடுத்தார்.

3. அதே புதரில் இருந்து ஒரு ஹேண்ட் பேக் பிங்க் கலரில் இருந்ததையும் எடுத்து எதிரி சாட்சிகள் முன்னிலையில் என்னிடம் ஒப்படைத்தார். அதே சாட்சிகள் முன்னிலையில் பிங்க் நிற பேட் மற்றும் காசோலைகளை பொறுத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அதன் பிறகு 10.15 மணிக்கு எதிரி எங்களை அழைத்துக்கொண்டு புது ரோடு, நெசவாளர் காலனிக்கு கூட்டி சென்றார். அங்கு அவர் வீட்டில் இருந்து எதிரி மெரூன் கலர் டி-ஷர்ட் ஒன்று கலர் லுங்கி ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவ்வாறு ஆஜர் செய்த சொத்துக்களை சாட்சிகள்

முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜர் தான் அது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் காசோலை புத்தகங்கள் மற்றும் பிங்க் கலர் பேக் ஆகியவைதான் எதிரி தன்னிச்சையாக எடுத்துக் கொடுத்ததை நான் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றிய சொத்துக்கள்.

4. அதன் பிறகு அன்றைய தினம் 12 மணிக்கு கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து தக்க காவலுடன் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம் தயார் செய்து சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் படி சம்பந்தப்பட்ட காவலரிடம் ஒப்படைத்தேன்தற்போது காண்பிக்கப்படும் படிவம் 95 (3 எண்ணிக்கை) தான் என்னால் தயார் செய்யப்பட்டவை. இருசக்கர வாகனத்திற்கு உரிய படிவம் 95 அ.சா.ஆ–13. மெருன் கலர் டீ சர்ட் மற்றும் லுங்கி காண படிவம் 95 அ.சா.ஆ– 14. இரண்டு காசோலை புத்தகம் மற்றும் ஹேண்ட் பேக்குகான படிவம்– 95. அ.சா.ஆ– 15. அன்றைய தினம் சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் செந்தில்குமாரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.5.12.2023 ஆம் தேதி அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக சம்பந்தப்பட்ட குற்றவியல் துறை நடுவர் நீதிமன்றத்தில் அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்தேன். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.4 ல் தாக்கல் செய்யப்பட்ட மனு. அதன் பிறகு நல்லூர் காவல் நிலையத்திற்கு புதிதாக குற்றப்பிரிவு ஆய்வாளர் பணி ஏற்றுக் கொண்டதால் வழக்கு விசாரணையை கோப்பை அவரிடம் ஒப்படைக்கும்படி கூறினேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரி கைது செய்ததாக சொல்லப்படும் சிவா கிரேன் அலுவலகம் எதிரில் நல்லூர் காவல் நிலையம் மற்றும் நல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் உள்ளது என்றால் சரி. என்ன காரணத்திற்காக அந்த சமயத்தில் நல்லூர் கிராம நிர்வாக அலுவலரும் அவருடைய உதவியாளரும் அங்கு வந்திருந்தார் என்பதை பொறுத்து என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் நான் அழைத்ததன் பேரில் வந்தார்கள். எத்தனை மணிக்கு நல்லூர் கிராம நிர்வாக அலுவலருக்கு நேரில் வரும்படி அழைப்பு ஆவணமாக கொடுத்தேன் என்றால் ஆவணமாக கொடுக்கவில்லை.

அலைபேசி வாயிலாக அழைத்தேன். எத்தனை மணிக்கு அழைத்தீர்கள் என்றால் சுமார் ஆறு மணி இருக்கும். இந்த விவரங்கள் வழக்குக்கோப்பில் உள்ளதா என்றால் உள்ளது.

2. அம்மாதிரி அழைப்பு எதுவும் நான் கிராம நிர்வாக அலுவலருக்கு அன்றைய தேதியில் அழைக்கவில்லை. தற்சமயம் வழக்கிற்காக இவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் காலை ஆறு மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் அவருடைய அலுவலகத்திற்கு வரவில்லை காலை 8 மணிக்குத்தான் அலுவலகத்திற்கு வந்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்குச் சம்பந்தமாக சிவா கிரேன் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அல்லது அந்த நிறுவனத்தின் உரிமையாளரை விசாரித்தீர்களா என்றால் விசாரித்தேன். வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை யாரை விசாரித்தேன் என்ற விவரங்கள் வழக்குக்கோப்பில் உள்ளதா என்றால் இல்லை.

3. HP பெட்ரோல் பங்கில் உள்ள நபர்களை யாரையும் வழக்கை பொறுத்து விசாரணை செய்யவில்லை என்றால் சரி. சிடி பஜாஜ் இருசக்கர வாகனம் சிவபெருமாள் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இருந்தது நான் அதை கைப்பற்றவில்லை. போலீசார் விசாரணையில் சிவபெருமாள் அந்த வாகனத்தை ராஜசேகர் என்பவரிடமிருந்து வாங்கியதாக சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. அவர் வாகனம் எவ்வாறு வந்தது என்று சொல்லி உள்ளார் என்றால் அந்த சாட்சியை நான் விசாரணை செய்யவில்லை.

4. சிவா கிரேன் நிறுவனத்திற்க புதுப்பாளையத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 3 km. வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட முட்புதற்கும் புதுப்பாளையம் பேருந்து நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கிலோமீட்டர் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட இடத்தில் சுற்றிலும் நிறைய முட்புதர்கள் உள்ளது. நான் சொல்லும் முட்புதற்கு வேறு ஏதேனும் அடையாளக் குறிப்புகள் இருந்ததா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட போது சட்ட விதிகளுக்கு உட்பட்டு சரியான முறையில் சீல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். சாட்சிகள் இருவரும் அவ்வாறு வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு சீல் வைக்கப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லவில்லை.

5. கிராம நிர்வாக அலுவலர் அவருடைய பணியை தவிர வேறு பணிகளை மேற்கொள்வதாக சென்றால் அதைப்பற்றி முன்அனுமதியுடன் அவருடைய

வட்டாட்சியரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரியல்ல. வட்டாட்சியர் அவ்வாறு அனுமதி கொடுக்கப்பட்டு இரண்டு நகங்கள் தயாரிப்பு செய்யப்பட்டு ஒரு நகல் புலன் விசாரணை அதிகாரியிடம் விதிகள் படி கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அதன் பிறகு அவர் அலுவல் தொடர்பு இல்லாத மற்ற பணிகளுக்குச் சென்ற விவரங்களை அறிக்கையாக வட்டாட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் விசாரணையில் இதைப் பற்றி சாட்சிகள் இருவரும் சொல்லவில்லை என்றால் சரி. அழைப்பின் பெயரில் தான் அவர்கள் வந்தார்.

6. கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் எதிரியிடம் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் நான் பெறவில்லை என்றால் தவறு. அவ்வாறு தயார் செய்யப்பட்டதாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த ஒரு வழக்கு சொத்தும் எதிரி தன்னிச்சையாக முன்வந்து என்னிடம் ஆஜர் படுத்தவில்லை என்றால் தவறு. எதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் தவறு. ஒப்புதல் வாக்குமூலம் கைப்பற்றுதல் மகஜர்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு கையொப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றால் தவறு. கிராம நிர்வாக அலுவலரோ அவருடைய உதவியாளரோ சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் தவறு.

7. கிராம நிர்வாக அலுவலரோ அவருடைய உதவியாளரோ வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரியை பார்த்ததில்லை. முதன் முதலில் நீதிமன்றத்தில் தான் பார்த்தார்கள் என்றால் தவறு. வழக்கு விசாரணை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் தவறான விசாரணை மேற்கொண்டு தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.09.11 18:46:05 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.